'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றார் ஔவைப்பாட்டி. அரிய பிறப்பை அடைந்த மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் அவன் மனுதர்மத்தை அதாவது மனிதவிழுமியப் பண்புகளைக் கடைப்பிக்க வேண்டும். மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை வேதங்கள் கூற 'நின்றாலும் அவை தெரியாமல் தர்மம் அல்லாத வழியிலல்லவா மனிதன் செல்லத் தொடங்கினான். எனவே இந்தப் பூமியில் அதர்மங்கள் தலைவிரித்து தாண்டவம் ஆடிய பொழுது உலகைக் காக்கும் பரம்பொருள் அவதார புருசராகப் பிறந்து மனிதன் எப்படி வாழவேண்டும் என்கின்ற வாழ்க்கை நெறியை வாழ்ந்து காட்டினார். அதாவது அறத்தோடு கூடிய வாழ்க்கை எப்படி என்பதை காட்டி நிற்கிறது இராமாயணம் என்கின்ற இதிகாசம்.

**'அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**

**இழுக்கா இயன்றது அறம்'**

என்று வள்ளுவர் கூறுவதைப் போல் அறத்தோடு வாழ வேண்டும். தவறான குணநலங்களோடு வாழ்ந்தால் இறுதியில் மிஞ்சி நிற்பது மரணம் ஒன்று தான் என்பதை விளக்கிக் காட்டுகிறது மகாபாரதம் என்கின்ற இதிகாசம். இராமாயணத்தில் இராமபிரானுக்கு மூன்று தம்பிகள் மட்டும் இல்லை. வேடவர் குலத்தில் பிறந்த குகனும் அரக்கர்குலத்தில் அவதரித்த விபீடணனும் ஏன் ஜடாயுவும் சகோதரர்கள் ஆனார்கள். அதுமட்டுமல்ல தந்தையின் ஆணையை தாய் சொல்லக் கேட்டு இராமபிரான் 14 ஆண்டுகள் வனவாசம் சென்றதும் அண்ணல் இராமபிரானின் பிரிவைத்தாங்காது அவரது பாதுகைகளை எடுத்து வந்து பரதன் அரசாட்சி செய்ததும், பின்னர் இராமபிரான் வனவாசம் முடித்து குறித்த நேரத்திற்கு வரவில்லையே என்று பரதன் தீக்குளிக்க எத்தனித்ததும், ஏன் 14 வருடங்களாக நித்திரை கொள்ளாது அண்ணன் திருவடிகளை காவல்காத்த இலக்சுமணனின் பாசம் பக்தி இவைகளைப் பார்க்கும் போது சகோதர வாஞ்சையின் சிறப்பு தெரிகின்றதல்லவா?

மகாபாரதத்தில் தர்மசக்தி குறைந்த அளவில் இருந்த போதிலும் அதாவது அதர்மங்கள் நிறைந்த அளவில் இருந்தும் இறுதியில் தர்மமே வெற்றிபெறவில்லையா? வாழ்வில் அவ்வப்போது ஏற்படும் சிக்கல்களையும் பிரச்சனைகளையும் எப்படி சமாளிப்பது என்பதற்கு வழிகாட்டும் புருஸர்களாக இவ் இதிகாசத்தின் நாயகர்கள் விளங்குகின்றனர். இதை அறிபவர்கள் வாழ்க்கையில் எதையும் சமாளிக்க வல்லவர்களாக இருப்பதால்தான் இதை ஐந்தாம் வேதம் என்று அழைத்தனர். அதுமட்டுமல்ல பாரதம் பல அரிய கருத்து மோதல்களையும் தேர்ந்த சிந்தனைகளையும் தன்னுள்ளே கொண்டுள்ளது. சாந்தி பருவத்தில் தருமருக்கு பீஸ்மர் செய்யும் உபதேசமும் நச்சுப்பொய்கையில் யட்சன் தருமர் விவாதமும் எது தேவை என்பதை உணர்த்தி நிற்கிறது.

அது மட்டுமல்ல மகாபாரதத்தின் மணிமகுடமாக திகழ்வது பகவத்கீதையாகும். ஆதில் கூறப்பட்டுள்ள உபதேசங்களும், நீதிகளும் பழைய சமுதாயத்தின் பண்புகளை அல்லவா எங்களக்கு எடுத்துக் காட்டுகின்றன. நகுலனின் தாய்மாமனான சல்லியன் பாண்டவர்களுக்கு உதவி செய்ய படையெடுத்து வரும் போது உறவினன்தானே என்று பாண்டவர்கள் கவனிக்காமல் இருக்க துரியோதனன் அவர்ளை அழைத்து விருந்தோம்பல் செய்து மகிழ்வித்தான். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டும் என்பதற்காக சல்லியன் மகாபாரதப் போரில் கௌரவர் பக்கம் நின்றார். இது எமக்கு எதை எடுத்துக் காட்டுகிறது? நமக்கு மிக வேண்டிய உறவினராக இருந்தாலும் அவர்கள் நமது எண்ணம் போல் நடப்பார்கள் என்று முடிவு செய்ய கூடாது என்பது தெரிகின்றதல்லவா? பாண்டவர்கள் தன் சகோதரர்கள் என்று தெரிந்தும் நட்புக்காக தீயவனான துரியோதனன் பக்கம் நின்று கர்ணன் போர் புரிந்து மாண்டானே? இது எமக்கு எதை நினைவூட்டுகிறது? " உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண்

களைவதாம் நட்பு" என்பதையும் செஞ்சோற்று கடனையும் அல்லவா நினைவூட்டுகிறது. ஏன் இராமாயணததிலும் நித்திய வரம் கேட்டு நித்திரை வரம் வாங்கிய கும்பகர்ணனும் அண்ணன் வழி தீயது என்று தெரிந்தும் அண்ணன் இராவணனுக்காக தன் அரக்ககுலப் பெருமையை காப்பாற்றுவதற்காக இராமாயணத்தால் கும்பகர்ணன் மாளவில்லையா? காப்பியங்களில் வரும் எதிர்முனைப் பாத்திரங்கள் தீமையின் சித்தரிப்புக்களாகவே அமைந்துள்ளன. இராவணன், துரியோதனன, சூரபத்மன் இவர்கள் போர்களத்திலே மாண்டபோது மண்ணுக்காக போரிட்டு மடிந்தான் துரியோதனன். மானத்திற்காக போரிட்டு மடிந்தான் சூரபத்மன் பெண்ணுக்காக போரிட்டு மடிந்தான் இராவணண்.

இராமாயணத்தில் இராமபிரான் ஏகபத்தினி விரதனாக இருந்து அறவழி நின்றார். பாரதத்தில் பொறுமையின் சின்னமாக தருமர் இருந்தாலும் அவர் சூதாட்டத்தின் மீது கொண்ட விருப்பே பாரதப் போர் நிகழ்வற்கு காரணமாக அமைந்தது. சகோதரர்களிடையே நிகழ்ந்த ஒற்றுமை இன்மையும் அது போராக மாறிய நிலையும் இறுதியில் தீய குணம் கொண்ட கௌரவ சேனை அழிவதும் இக் கால மக்களுக்கு அறிவூட்டுவதாக அமைந்துள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றதல்லவா?

யதார்த்த வாழ்வில் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களுக்கு மட்டுமல்ல மனித குலத்திற்கே அறம், பொருள், இன்பம் எது என்று எடுத்துரைக்கும் காவியங்களாக இதிகாசங்கள் அமைந்து எம்மை வழிநடத்தி வருகின்றன என்பதில் ஐயமில்லை.

வணக்கம்